# TPV / SHEV விசா குழுவினருக்கான நிரந்தர விசாக்கள்

நீங்கள் 'தற்காலிகப் பாதுகாப்பு விசா' (Temporary Protection Visa (TPV)) அல்லது 'பாதுகாப்புப் புகலிட முயற்சி விசா' (Safe Haven Enterprise Visa (SHEV).) ஒன்றை வைத்திருப்பவர் அல்லது எப்போதாவது வைத்திருந்தவர் என்றால், நிரந்தர விசா ஒன்றைப் பற்றிய விதிமுறைகளை இந்தத் தகவல் ஏடு விளக்கிச் சொல்லும்.

14 ஃபிப்ரவரி 2023-இற்கு முன்பு TPV அல்லது SHEV விசா ஒன்றை நீங்கள் வைத்திருந்தீர்கள் என்றால், அல்லது TPV அல்லது SHEV ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பித்தீர்கள் என்றால் இந்தத் தகவல்கள் உங்களுக்குப் பொருந்தும்.

TPV அல்லது SHEV விசா ஒன்றை வைத்திருக்கும் அனைவரையும் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து இருப்பதற்கான நிரந்தர விசா ஒன்றிற்கான தகுதியைப் பெற அனுமதிக்கும் விதமாக 14 ஃபிப்ரவரி 2023 அன்று சட்டம் மாறியது. இந்த நிரந்தர விசாவானது 'தகுநிலைத் தீர்மானிப்பு விசா (உபபிரிவு 581) (RoS Visa)' (Resolution of Status Visa (Subclass 581) (RoS Visa)) என்று சொல்லப்படுகிறது.

நிரந்தரமான 'RoS விசா' ஒன்று உங்களுக்கு வழங்கப்படும் வரை உங்களுடைய TPV மற்றும் SHEV விசாக்களில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்பதைக் கவனிக்கவேண்டியது முக்கியம். 'உள்நாட்டு விவகாரத் திணைக்கள'த்திடமிருந்து ('திணைக்களம்') அனுமதி பெறாமல் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உங்களால் பயணிக்க இயலாது என்பது இதன் அர்த்தமாகும்.

<u>TPV அல்லது SHEV விசாவிற்கான உங்களுடைய முதலாவது விண்ணப்பத்தின் மீதான **முடிவு ஒன்றிற்காக நீங்கள்** இன்னமும் **காத்துக்கொண்டிருக்கிறீர்கள்** என்றால்</u>

உங்களுடைய முதலாவது TPV அல்லது SHEV விசாவிற்கான விண்ணப்பத்தின் மீதான முடிவு ஒன்றிற்காக நீங்கள் இன்னமும் காத்துக்கொண்டிருப்பீர்களேயானால், உங்களுடைய TPV அல்லது SHEV விசாவிற்கான விண்ணப்பத்தினை நீங்கள் தொடரவேண்டும். TPV அல்லது SHEV விசாவிற்கான விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்கள் என்று 'திணைக்களம்' அடையாளம் கண்டால், நிரந்தர 'RoS விசா' ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.

'திணைக்கள'த்திடம் உள்ள உங்களுடைய தொடர்பு விபரங்கள் நடப்பு நாள் வரை சரியானவையாக உள்ளன என்பதை உறுதிப்படுத்திகொள்ளுங்கள். உங்களுடைய TPV/SHEV விசாவைப் பற்றிய கடிதம் ஒன்றை நீங்கள்

‘திணைக்கள’த்திடமிருந்து பெற்றால், RAILS சேவையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

<u>உங்களுடைய **முதலாவது** TPV அல்லது SHEV விசா இன்னும் காலாவதியாகாமல் இருந்தால்</u>

TPV அல்லது SHEV விசா ஒன்றை நீங்கள் வைத்திருந்தால், ‘RoS விசா’ ஒன்றிற்காக, இணையவழியில் ‘இம்மி-அக்கவுண்ட்’ மூலம் நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்களுடைய தற்போதைய <u>TPV அல்லது SHEV விசா சட்டப்படியாக செல்லுபடியாவது நிற்பதற்கு முன்பு நீங்கள் கட்டாயமாக விண்ணப்பித்தாக வேண்டும். விண்ணப்பிப்பதற்கு நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கவேண்டும்.</u>

நிரந்தரமான ‘RoS விசா’ ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்கும் பொழுது உங்களுடைய பாதுகாப்புக் கோரிக்கைகள் மீள்-மதிப்பீடு செயப்படும், ஆனால் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை குறித்த தேவைப்பாடுகளை நீங்கள் பூர்த்தி செய்யவேண்டியிருக்கும், மற்றும் குடிவரவு மருத்துவ சோதனை ஒன்றை நீங்கள் ஏற்கனவே மேற்கொண்டிருக்கவில்லை என்றால், அந்த சோதனை ஒன்றை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உதவிக்காக நீங்கள் RAILS சேவையுடன் தொடர்புகொள்ள வேண்டும். எமது சட்டதரணிகளில் ஒருவருடன் நீங்கள் பேசும் வரை இணையம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டாம் என்று நாங்கள் வலுவாகப் பரிந்துரைக்கிறோம். தவறு ஒன்றைச் செய்துவிடுவது மிகவும் எளிதானதாக இருக்கலாம், மற்றும் இது உங்களுடைய விசாவின் மீது, அல்லது விண்ணப்பத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடும்.

<u>இன்னொரு TPV அல்லது SHEV விசாவிற்காக நீங்கள் **ஏற்கனவே மீள்-விண்ணப்பம்** (அடுத்த விண்ணப்பம்) இட்டிருந்தால்</u>

முதலாவது TPV அல்லது SHEV விசா ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், மற்றும் இன்னொரு TPV அல்லது SHEV விசா ஒன்றிற்காக நீங்கள் ஏற்கனவே மறுவிண்ணப்பம் செய்திருந்தால், நிரந்தர ‘RoS விசா’ ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அடுத்த ஒரு TPV அல்லது SHEV விசாவிற்கான உங்களுடைய விண்ணப்பமானது நிரந்தர ‘RoS விசா’ ஒன்றிற்கான விண்ணப்பமாகத் தானாகவே எடுத்துக்கொள்ளப்படும்.

‘திணைக்கள’த்திடம் உள்ள உங்களுடைய தொடர்பு விபரங்கள் நடப்பு நாள் வரை சரியானவையாக உள்ளன என்பதை உறுதிப்படுத்திகொள்ளுங்கள். உங்களுடைய TPV/SHEV விசாவைப் பற்றிய கடிதம் ஒன்றை நீங்கள் ‘திணைக்கள’த்திடமிருந்து பெற்றால், RAILS சேவையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

<u>TPV அல்லது SHEV விசா ஒன்று உங்களிடம் இருந்திருந்து அது **காலாவதியாகியிருந்தால்**</u>

TPV அல்லது SHEV விசா ஒன்று உங்களிடம் இருந்து, உங்களுடைய விசா காலாவதியாவதற்கு முன்பாக அடுத்த ஒரு விசாவிற்காக நீங்கள் விண்ணப்பிக்கவில்லை என்றால், நிரந்தரமான ‘RoS விசா’ ஒன்றிற்கான

தகுதியை நீங்கள் பெறக்கூடும். சட்ட அறிவுரையை நீங்கள் நாடவேண்டியது முக்கியம். RAILS சேவையுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

TPV அல்லது SHEV விசா ஒன்றை நீங்கள் வைத்திருந்து அது **இரத்து செய்யப்பட்டிருந்தால்**

TPV அல்லது SHEV விசா ஒன்றை நீங்கள் வைத்திருந்து, நன்னடத்தைக் காரணங்களையோ, மற்ற காரணங்களையோ முன்னிட்டு அது இரத்து செய்யப்பட்டிருந்தால், அந்த இரத்து தொடர்ந்து நீடிக்கும், மற்றும் நிரந்தரமான 'RoS விசா' ஒன்றிற்காக உங்களால் விண்ணப்பிக்க இயலாது.

ASRA மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள், அல்லது RAILS சேவையின் சட்டதரணி ஒருவருடன் பேசுங்கள். விபரங்கள் இங்கே: www.rails.org.au/our-legal-services/programs/asylum-seeker-and-refugee-assistance-program

TPV அல்லது SHEV விசா ஒன்றிற்கான உங்களுடைய விண்ணப்பம் **மறுக்கப்பட்டிருந்தால்**

TPV அல்லது SHEV விசா ஒன்று உங்களுக்கு மறுக்கப்பட்டிருந்தால், இந்த மாற்றம் உடனடியாக உங்களைப் பாதிக்காது. உங்களுடைய விடயம் 'குடிவரவு மதிப்பீட்டு அதிகாரம்' (Immigration Assessment Authority (IAA)) அல்லது 'நிர்வாக மேல்முறையீட்டு மன்ற'(Administrative Appeals Tribunal (AAT))த்திற்கு முன்பு இருந்தால், அல்லது உங்களுடைய விசா மறுப்பினை நீதிமன்றங்களில் நீதிமன்ற மீளாய்வு செய்யவேண்டுமென நீங்கள் கேட்டிருந்தால், நிரந்தரமான 'RoS விசா' ஒன்றிற்காகக் கருத்தில் கொள்ளப்படுவதற்கு முன்பு இந்த முறையீடுகளில் நீங்கள் வெற்றி பெறவேண்டும். உங்களுடைய விடயமானது 'திணைக்கள'த்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டு TPV அல்லது SHEV விசா ஒன்றிற்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்பவராக நீங்கள் காணப்பட்டால், நிரந்தர 'RoS விசா' ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.

மேல்முறையீட்டில் நீங்கள் வெற்றி பெறாமல் இருந்திருந்து, பாதுகாப்பிற்காக மீண்டும் விண்ணப்பிக்க உங்களை அனுமதித்துத் தலையிடுமாறு அமைச்சர் அவர்களை நீங்கள் வேண்டியிருந்தால், அந்த செயல்பாட்டினை நீங்கள் தொடர்ந்து மேற்கொண்டுவர வேண்டியிருக்கும். TPV அல்லது SHEV விசா ஒன்றிற்காக விண்ணப்பிக்க அமைச்சர் உங்களை அனுமதித்தால், மற்றும் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய கடமை இருக்கிறது என்று 'திணைக்களம்' முடிவுசெய்தால், மற்றும் TPV அல்லது SHEV விசா ஒன்றிற்கான விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்தால், நிரந்தர 'RoS விசா' ஒன்று உங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

TPV அல்லது SHEV விசா ஒன்று உங்களுக்கு மறுக்கப்பட்டிருந்து, 'நற்கூறு மீளாய்வு முறையீடு' (IAA அல்லது AAT) ஒன்று, நீதிமன்ற மீளாய்வு குறித்த விடயம் ஒன்று அல்லது அமைச்சக வேண்டுகோள் ஒன்று தற்சமயம் நடைமுறையில் இல்லை என்றால் இந்த மாற்றங்கள் உங்களுக்குப் பொருந்தாது. 'RoS விசா' ஒன்றிற்காக உங்களால் விண்ணப்பிக்க இயலாது.

உங்களுடைய TPV/SHEV விசா விண்ணப்பம் மறுக்கப்பட்டிருந்தால், RAILS சட்டதரணி ஒருவருடன் பேசுவதற்காக ASRA மையம் ஒன்றிற்குச்

செல்லுங்கள். விபரங்கள் இங்கே: www.rails.org.au/our-legal-services/programs/asylum-seeker-and-refugee-assistance-program

‘நவுரு’ அல்லது ‘பீ.என்.ஜீ’ -யில் இருந்து என்றால்

நீங்கள் ‘நவுரு’ அல்லது ‘பீ.என்.ஜீ’ -க்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தால், மற்றும் TPV அல்லது SHEV விசா ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்காக அனுமதிக்கப்படவில்லை என்றால் இந்த மாற்றம் உங்களுக்குப் பொருந்தாது.

## தகு நிலைத் தீர்மானிப்பு விசா (உபபிரிவு 851)
## (Resolution of Status Visa (Subclass 851))

இந்த நிரந்தர விசா உங்களுக்கு வழங்கப்படும் பொழுது, ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக இருக்க நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள், *ஆனால்*, 5 வருடங்களுக்கு மட்டுமே ஆஸ்திரேலியாவிற்கு வெளியே பயணம் செய்யவும் ஆஸ்திரேலியாவிற்குள் வரவும் நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

உங்களுடைய நிரந்தர விசா வழங்கப்பட்டதிலிருந்து 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலியாவிற்கு வெளியே நீங்கள் பயணம் செய்ய விரும்பினால் - மற்றும் நீங்கள் ஒரு ஆஸ்திரேலியப் பிரசை அல்ல என்றால் - ‘தங்குநர் திரும்பல் விசா (உபபிரிவு 155)’ (Resident Return Visa (Subclass 155)) ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். ஒப்பீட்டளவில், இது விரைவான மற்றும் எளிதான ஒரு செயல்முறையாகும், இருந்தாலும், ஆஸ்திரேலியாவிற்குத் திரும்புவதில் உள்ள சிரமத்தை மட்டுப்படுத்துவதற்காக, நீங்கள் வெளியே பயணிப்பதற்கு *முன்பாக* இதைச் செய்யவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியம்.

அச் சமயத்தில் நீங்கள் ஒரு அஸ்திரேலியப் பிரசையாக இருந்தால், ‘தங்குநர் திரும்பல் விசா’ (Resident Return Visa) ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்காது.

### குடும்ப மீளிணைவு

இந்த நிரந்தர விசா உங்களுக்கு வழங்கப்படும் பொழுது, ‘வாழ்க்கைத்துணைவர் விசா’ (Partner Visa), ‘குழந்தை மற்றும் அநாதை உறவு விசா’ (Child and Orphan Relative Visa) ஆகிய விசாக்கள் உள்ளடங்க, ‘ஆஸ்திரேலிய குடும்பப் பிரிவு விசா’ (Australia’s Family Stream Visa) எனும் திட்டம் மூலமாக குடும்ப அங்கதவர்களுக்கு ஏற்பாதரவு கொடுத்து அவர்களை ‘ஸ்பான்சர்’ செய்ய நீங்கள் தகுதி பெறக்கூடும்.

ஆஸ்திரேலியாவின் ‘கரை-கடந்த மனிதாபிமானத் திட்ட’த்தின் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகள் சில இருக்கக்கூடும்.

நிரந்தரமான ‘RoS விசா’ ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டால், ‘மெடிகெயர்’, ‘செண்ட்டர்லிங்க்’, மற்றும் ‘தேசிய இயலாமைக் காப்பீட்டுத் திட்டம்’ (National

Disability Insurance Scheme) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசாங்க சேவைகளுக்கான உரிமம் உங்களுக்கு இருக்கும்.

## RAILS சேவையிடமிருந்து உதவி பெறல்

நிரந்தர 'RoS விசா' ஒன்றிற்காக விண்ணப்பிக்க RAILS சேவையினால் உங்களுக்கு உதவ இயலும். உங்களுடைய விசாவைப் பற்றி 'திணைக்கள'த்திடமிருந்து வரும் கடிதங்களுக்கு மறுமொழியளிக்க எம்மால் உங்களுக்கு உதவ இயலும்.

RAILS சேவையானது முற்றிலும் 'திணைக்கள'த்தைச் சாராதது. எமது உதவி இலவசம்.

உங்களுடைய TPV அல்லது SHEV விசா விரைவில் காலாவதியாகிறது என்றால், அல்லது உங்களுடைய 'RoS விசா'-விற்கான விண்ணப்பம் சம்பந்தமாகக் கூடுதல் தகவல்களைக் கொடுக்குமாறு 'திணைக்களம்' உங்களைக் கேட்டிருந்தால், (07) 3846 9333 எனும் இலக்கத்தில் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம், அல்லது PR@rails.org.au எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

### குயீன்சுலாந்து மாநிலத்திற்கு வெளியே உங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா?

- **விக்டோரியா (Victoria)**

  **'ரெஃப்யூஜீ லீகல்' (Refugee Legal)**
  தொலைபேசி: (03) 9413 0101 | மின்னஞ்சல்: clinic@refugeelegal.org.au |
  வலைத்தலம்: https://refugeelegal.org.au/

  **'புகலிடம் நாடுவோர் மூலவள மையம்'**
  **(Asylum Seeker Resource Centre (ASRC))**
  தொலைபேசி: (03) 9252 2534 | மின்னஞ்சல்: legalcasework@ASRC.ORG.AU |
  வலைத்தலம்: https://asrc.org.au/

- **நியூ சவுத் வேல்ஸ் (New South Wales)**

  **'ரெஃப்யூஜீ அட்வைஸ் அண்ட் கேஸ்வொர்க் சர்வீஸ்'**
  **(Refugee Advice and Casework Service)**
  தொலைபேசி: (02) 8317 6505 | மின்னஞ்சல்: admin@rails.org.au |
  வலைத்தலம்: www.rails.org.au

- **வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா (Western Australia)**

  **'சர்க்கிள் க்ரீன் கம்யூனிடி லீகல்' (Circle Green Community Legal)**
  தொலைபேசி: (08) 6148 3636 | மின்னஞ்சல்: enquiries@circlegreen.org.au |
  வலைத்தலம்: https://circlegreen.org.au/

- **டாஸ்மேனியா (Tasmania)**

  **'டாஸ்மேனியன் ரெஃப்யூஜீ லீகல் சர்வீஸ்' (The Tasmanian Refugee Legal Service (TRLS))**

தொலைபேசி: (03) 6169 9473 | மின்னஞ்சல்: info@rlstas.com |
வலைத்தலம்: www.rlstas.com